பல்லாண்டு பாடுவோம்; பலகோடி கூறுவோம்!

கலைஞர்க்குப் பிறகிந்தக்
கழகந்தான் என்னாகும்!
நிலைக்குமா? நீளுமா
நிலவுமா? எனக்கண்ணீர்
அலையாகத் தொண்டர்கள்
ஆற்றாமல் விடுகையில்
குலையாதீர்; கழகத்தின்
கொடியேந்தி நடப்பேன்நான்;
தலைமகன் அண்ணாவின்
தமிழெனும் தடத்திலே
இலையிங்கே கலைஞரெனும்
ஏக்கத்தைப் போக்குவேன்;
தலைநிமிர்ந்து செல்லுவேன்;
தன்மானம் பகுத்தறிவு
நிலைதந்த பெரியாரை
நெஞ்சிலே கொள்ளுவேன்!

விலையாகி வடவர்முன்
விழுந்திடும் ஆட்சியைத்
தொலைத்திங்கே
வெல்லுவேன்;
தொண்ணூற்று ஐந்தாண்டு
நிலைத்திங்கே கழகத்தின்
நெடும்பயண வெற்றிகண்ட
கலைஞரின் உயிர்உணர்வில்
கலந்துவிட்ட உடன்பிறப்பீர்!

மலையெதிர்த்து நின்றாலும்
மாக்கடல் மறித்தாலும்
வலைபல விரித்தாலும்
வஞ்சகம் சிரித்தாலும்
கொலைவாளே நீண்டாலும்
கொடுங்கோலே ஆண்டாலும்
புலையரை வணங்கேன்நான்;
புன்மையை இணங்கேன்நான்!

உலகெலாம் ஒளிவீசும்
ஓர்உதய சூரியனே
இலகிடச் செய்குவேன்;
இலக்கினை எய்துவேன்;
விலகிட அடிமைநிலை
விளைந்திட விடுதலை
உலவிடும் தென்றலே
உறுத்தெழும் புயலாவேன்;
கலக்கத்தைக் கொள்ளாமல்
கழகத்தின் வெற்றியே
இலக்காகக் கொள்ளுவேன்;
இடர்களைத் தள்ளுவேன்!
துலக்கமாய்ச் சொல்லுவேன்;
துணிவோடு செல்லுவேன்;
சலிக்காமல் எதிரிகளைச்
சமரினில் வெல்லுவேன்!
சொன்னபடி கழகத்தைத்
தூக்கியே நிறுத்தியவர்,
முன்னிருந்த பெருமைக்கு
முடுக்கியே விட்டவர்
கன்னக்கோல் கூட்டத்தைக்
காதகாதம் ஓட்டியவர்
மன்னர்போல் வெற்றிக்கு
மக்களைக் கூட்டியவர்

நின்றிருந்த ஆட்சித்தேர்
நில்லாமல் செலுத்துபவர்
பின்னிருந்து பேசாமல்
பீடுடன் ஆற்றுபவர்
மின்னல்போல் பணிகளை
வேகமாய் முடிப்பவர்
கன்னல்போல் மொழிபவர்
கார்முகிலாய்ப் பொழிபவர்
ஒன்றல்ல இரண்டல்ல
உடற்றிய பன்னூறு
நன்றான செயல்களால்
நடுங்காத திண்மையால்
இன்றல்ல நாளையும்
இவரேதான் ஆளுவார்!

எண்ணற்ற நன்மைகள்
இவராட்சி ஏற்றபின்
விண்ணுற்ற மீன்களாய்
விரிகடல் அலைகளாய்
மண்ணுற்ற மலைகளாய்
மாமழை முகில்களாய்க்
கண்ணுற்ற காட்சியாய்க்
கைகளில் கிட்டின!

பெண்களுக்கு இவர்செய்த
பெருமைகள் அருமைகள்
வண்ணம்போல் இனியவை;
வாழ்க்கைக்கு ஏற்றவை;
கிண்ணத்துப் பால்போலக்
கேளாமல் கிட்டுபவை;
எண்ணித்தான் பார்த்தாலோ
இவர்போல இன்னொருவர்
கண்ணிலே படவில்லை;
கருத்தையும் தொடவில்ல!

தண்ணீரும் காவிரியும்
சந்தனமும் நன்மணமும்
வெண்மையும் தந்தமும்
விளக்கொளியும்
வெளிச்சமும்
கண்களும் இமைகளும்
கருங்கடலும் பேரலையும்
பண்களும் இன்னிசையும்
பாடலும் கருத்தும்போல்
உண்மையாம்; மேன்மேலும்
உருவாகும்; உயர்வாகும்
வண்மைகள் ஓங்கிட
வழிகாணும் தளபதியை

அண்ணாவுடன் கலைஞர்
ஆன்றோர் பேராசிரியர்
மண்ணாளும் மாண்பினால்
மகிழ்ந்திங்கு வாழ்த்துதல்
கண்ணார நெஞ்சாரக்
கருத்தாரக் காணுவோம்!

எண்ணமெலாம் கழகத்தின்
எதிர்கால வெற்றியே
திண்ணமாய்க் காணுகின்ற
தில்லியே கலங்குகின்ற
வண்ணமாய் இயங்குகின்ற
வன்மைமிகு தலைவர்க்கு
வண்ணமலர் தூவுவோம்;!
வாயாரப் பாடுவோம்
உண்ணுநீர் காற்றைப்போல்
உவந்திங்கே வாழ்த்துவோம்!

செயல்வேகம் கண்டுகண்டு
திகைக்கின்றார் திசையெங்கும்;
அயர்கின்றார் மாற்றாரும்;
அடங்குகின்றார் போற்றாரும்!
புயல்வருமுன் மழையெழுமுன்
பொல்லாநோய் பற்றுமுன்
முயல்வேகம் கொண்டங்கு
முன்வந்து நிற்கின்றார்;
இயல்பாகத் தொண்டரை
இனிதாகக் காணுகின்றார்!

துயர்ப்படு வோர்களுக்குத்
துணையாக எழுகின்றார்;
பயப்படு வோர்களுக்குப்
பாங்கனாய்த் தெரிகின்றார்;
தயங்குவோர் தோள்களைத்
தட்டியே கொடுக்கின்றார்;
மயங்குவோர் குழப்பத்தை
மாற்றியே காட்டுகின்றார்!

பேராசிரியர்
மா.செல்வராசன்

வயல்செழிக்கும் பயிராக
வாழ்வுக்கோர் உயிராக
கயல்கொழிக்கும் கடலாக,
கார்புரளும் வானாக,
வியர்வைக்குக் காற்றாக,
வேட்கைக்கு நீராக
அயர்வுக்குத் தீயாக
ஆற்றலுக்கு நிலமாக
உயர்வுக்கு மலையாக
உழைப்புக்கோர் ஆறாக
வெயிலுக்கு ஞாயிறாய்
வெம்மைதீர் வெண்ணிலவாய்
மயிலுக்குத் தோகையாய்
வான்குயிலுக் கின்னிசையாய்
எயிறுபோல் அரணாக
இன.மொழிக்குக் காவலராய்
உயிருக்கு உயிராக
உள்ளவர் தளபதி
உயிர்த்திடும் பிறந்தநாள்
ஒப்பற்ற சிறந்தநாள்

உயர்ந்தோங்கி நூறாக
ஒளிர்கவே; வளர்கவே!

கரிகாலன் போல்இளமைக்
காலத்தில் சிறைப்பட்டு,
தரித்திருந்த மணமாலை
சருகாக வாடுமுன்
பிரிந்தவர் இன்துணையை,
பெருந்துயர் உற்றாலும்
உரிமைக்குப் போராடி
உதையுண்டும் வதையுண்டும்
வரிப்புலியாய்ப் பலமுறை
வன்சிறை மீண்டவர்,
விரிசிறகுப் பெரும் புள்ளாய்
விண்ணிலே எழுந்தவர்
குரிசிலாம் தளபதி
கொற்றத்தில் உளபதி
பரிசிலாய் வாழ்த்துகள்
பலகோடி வழங்குவோம்!

இரும்பரண் உருசியாவின்
ஈடற்ற தலைவராய்
இருந்தவர் பெயராலே
இலகுகின்ற தளபதி
கரும்பரண் போன்றவர்;
கழகந்தான் ஈந்தவர்;
அரும்பான காலத்தே
அரசியல் களத்திலே
துரும்பாகத் தூணையும்
தூக்கியே எறிந்தவர்!
இரும்பாரம் என்றாலும்
எதிர்கொண்டு நின்றவர்
பெரும்பாலும் போராட்டப்
பேரேட்டை நிரப்பியவர்
அரும்பாடு பட்டேனும்
அண்ணா கலைஞர்மேல்
சுரும்பாகப் பறந்தவர்;
தொண்டாலே சிறந்தவர்
இருந்தமிழ் போலென்றும்
இளமையாய் வாழ்கவே!

இத்தனை சிறப்புகள்
இமயமாய் இலகிடும்
மெத்தவும் பெருமைகள்
மேவிடும் தளபதியாம்
முத்துவேலர் பேரனை,
முத்தமிழ் அறிஞரின்
வித்தகச் செல்வனை
வெற்றிகாண் செம்மலை,
உத்தமித் தாய்வயிறு
உயிர்த்திட்ட ஒருமகனை
ஒத்துயர் கற்பரசி
உளத்துலவும் கொழுநனை,
தத்துகடல் இளங்கதிர்
உதயநிதி தந்தையை
வித்தான கழகத்தின்
விழுமிய தலைவனை
இத்தமிழ் நாடுபெற்ற
என்றென்றும் முதல்வனை
முத்துமுதல் மணிகளாய்
முகிழ்த்தலர் மலர்களைக்
கொத்தாகச் செண்டாகக்
குன்றாகக் கொட்டியே
நித்தமும் போற்றுவோம்;
நீடூழி வாழ்த்துவோம்!

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி ஆலோசனையின் பேரில் அறந்தாங்கியில் அறந்தாங்கி நகரக் கழக செயலாளர் க.இராஜேந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்ற எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழக மாநில மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர். எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு விழா பேருரையாற்றினார். நிகழ்ச்சியில் டாக்டர் அண்ணாமலை ரகுபதி, பரணி இ.ஏ.கார்த்திக்கேயன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை, உதயம் சண்முகம், பொன்துரை, பொன்.கணேசன், சக்தி.இராமசாமி, எஸ்.எம்.சீனியார், இரா.ஆனந்த், ஆர்.ஆர்.கே.கலைமணி, மணிராஜன், வீரையா, தி.முத்து, ஜி.சக்திவேல், டாக்டர் சுதர்சன், ஹரி.விமாலாதிராஜன், பாத்திமா பீவி, மு.முகமது யூனஸ், பழனியப்பன், வி.சி.செல்வம், பழ.மாரியப்பன், சு.சத்தியசீலன், ஆ.பழனிச்சாமி, கே.வி.ராமசாமி, ஜி.எம்.ஆர்.அனுராதா இராஜேந்திரன், எஸ்.அருளாந்து, த.அனந்தராமன், ராவுத்தர்கனி கார்த்திகேயன், செந்தில்வேலன், விவேக்ராஜா, வினோதன் போய், கார்த்தி கருப்பையா, ரஜினி, நைனா முகம்மது, பார்த்தசாரதி மற்றும் மாவட்ட,ஒன்றிய,வட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், திரளான பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

விளாங்குடி பேரூராட்சி முன்னாள் கவுன்சிலர்

முத்துப்போக்கினியன் முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

எம்.அமுதா முத்துப்போக்கினியன் - முன்னணியினர் பங்கேற்பு!

மதுரை, மார்ச் 7- மதுரை மாவட்டம் - விளாங்குடி பேரூராட்சி செயலாளராகவும், வட்டச் செயலாளராகவும் 4 முறை பணியாற்றியவர். பேரூராட்சி 2வது வார்டு கவுன்சிலராக மக்கள் பணி மேற்கொண்டவருமான முத்துப்போக்கினியன் அவர்களின் முதலாமாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (7.3.2024 - வியாழக்கிழமை) மாலை அவரது இல்லத்தில் (ஆசாத் தெரு, கூடல் நகர், மதுரை) நினைவில் வாழும் முத்துப்போக்கினியன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில் மதுரை மாநகராட்சி 2வது வார்டு கவுன்சிலர் எம்.அமுதா முத்துப்போக்கினியன் உள்ளிட்ட கழக முன்னணியினர், தோழர்கள் பங்கேற்று அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்துகின்றனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டம், காங்கேயம் தெற்கு ஒன்றியம், படியூர் ஊராட்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அநீதிகளை, கழக அரசின் சாதனைகளை பறைசாற்றிட இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் தமிழக பட்ஜெட்டின் சிறப்பம்சங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் வழங்கிடும் திண்ணை பிரச்சாரத்தை மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் துவக்கி வைத்தார். இதில் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கே.சண்முகசுந்தரம் உள்பட ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், BLA2 வாக்குச்சாவடி குழு ஒருங்கிணைப்பாளர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமை!

வேதாரண்யத்தில் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்! நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம்!

எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

நாகை. மார்ச். 7- நாகை மாவட்டம் வேதாரண்ம் நகர தி.மு.க. சார்பில் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, தமிழ் நாடு அரசு நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டம் வேதாரண்யம் ராஜாஜி பூங்காவில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார். வேதாரண்யம் நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்றத் தலைவருமான மா.மீ.புக ழேந்தி வரவேற்றார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், மகா.குமார், தலைஞாயிறு பேரூர் கழகச் செயலாளர் சி.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கழக மருத்துவர் அணி செயலாளர் எழிலன் நாகநாதன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் கழக விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், மாவட்டக் கழகச் செயலாளர் கற்பகம், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் சத்தியமூர்த்தி, எஸ்.வி.டி.அருள், அ.பாரிபாலன், தகவல் தொழில் நுட்ப அணி எஸ்.செல்வா, பரமேஷ்வரி, சார்பு அணிகளின் துணை அமைப்பாளர் எம்.ஆர்.சுப்பரமணியன், மீனவர் அணி ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலக்குழு வீரமுத்து, பொறியாளர் அணி சுதாகர், சுற்றுச்சூழல் அணி திருக்குமரன், எம்.எஸ்.அன்புவேலன், சின்னக்குமார், டி.எஸ்.அசோக், தாமோதரன், செந்தாமரை, ராஜேந்திரன் ஊராட்சி மன்ற தலைவர்கள் தமிழ்மணி, சுப்பிரமணியன், சுப்பராமன் நகர அவைத்தலைவர் கணேசன், துணைச் செயலாளர்கள் ராஜாஜி, ரஜிபுதீன், பொருளாளர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம் – மாநகர தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் என்கிற தலைப்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டம் தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மது விலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துச்சாமி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், எம்.கந்தசாமி, குறிஞ்சி என்.சிவகுமார், மா.சு.ராதாகிருஷ்ணன், மாவட்ட நிர்வாகிகள் கே.குமார் முருகேஷ், ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லபொன்னி, ப.க.பழனிச்சாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம், கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா கோ. இளங்கோவன்

மார்ச் 7 (2015)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீதும் கழகத்தின்மீதும் தன் இறுதிமூச்சு வரை பற்று கொண்டிருந்தவர்.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்த இவர், மாநிலம் முழுவதும் தலைமைக் கழகப் பேச்சாளராக 'துறவி' எனும் புனைப் பெயருடன் கழகக் கொள்கையினை பரப்பியதுடன், மாவட்ட அவைத்தலைவர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை கழகத்தில் வகித்தவர்.

1971, 1977 ஆகிய இரண்டு முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக திருச்சி மத்திய சிறையில், ஓராண்டு காலம் நெருக்கடிகால "மிசா" கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.